# அதிசய கிராமம்! அசராத பெண்மணி!

**7 வெற்றி கொடி கட்டு!**

**செ**ன்னையிலிருந்து சுமார் நூறு கி.மீ தூரத்தில், திருத்தணி அருகே தண்டலம் கிராமத்தில் நுழைந்தவுடன் பளபள வென்ற கோபுரத்துடன் ஆதி கேசவப் பெருமாள் கோயிலும், அதையொட்டிய சீனி வாச பெருமாள் கோயிலும், சற்றே தள்ளி அகஸ்தீசுவரர் ஆலயமும், பூந்தோட்டமும், சுற்றுச் சூழலும் சுத்தம் என்றால் அத்தனைச் சுத்தம்!

தண்டலம் கிராமத்தின் சிறப்புகள் இவை மட்டுமல்ல, இந்தக் கிராமத்தின் பெண்களும்தாம். சுறுசுறுப்பும் திறமையும், எதைக் கற்றுக் கொடுத்தாலும் பளிச் சென்றுப் புரிந்துகொண்டு செயல்படும் சாமர்த்தியமான பெண்கள்.

''**நா**ங்க எட்டாவது, பத்தாவது வரை படிச்சிருக்கோம். நல்லா எழுதப் படிக்கத் தெரியும். 'எங்க குடும்பம் எல்லாம் விவசாயக் குடும்பம்!'' என்று சொல்கிற சுதா, விஜயலட்சுமி, கௌரி, சுசீலா, ரேணுகா எல்லோரையும் இணைக்கும் அமைப்பு - அன்னபூரணி மகளிர் சுய உதவிக் குழு.

''முன்னே எல்லாம் நாங்க பெருமாள் கோயில் வாசல்ல கூடுவோம். மாசம் ஐம்பது ரூபா சேமிச்சோம். இப்போ ஐம்பது பேர் இருக்கோம். மாசம் நூற்று இருபத்து ஐந்து ரூபா சேமிக்கிறோம். இப்ப அன்னபூரணி சுய உதவிக் குழு தொடங்கினப்புறம் மசாலாப்பொடி, இட்லி - மிளகாய்ப் பொடி, சாம்பார் - ரசப் பொடி, வத்தக்குழம்பு - புளியோதரை மிக்ஸ், வத்தல் வடாம் அப்பளம், தானிய தோசை மிக்ஸ், ரவா தோசை, ரவா இட்லி மிக்ஸ் எல்லாம் மூணு வருஷமா தயார் பண்ணி விக்க ஆரம்பிச்சிட்டோம். இதுக்காகவே பக்கத்துல காந்தி கிராமத்துல போய் ஒரு வாரம் ட்ரெயினிங் எடுத்துக்கிட்டோம்!'' என்கிறார்கள்.

கோயிலை ஒட்டிய சிறிய 'சத்திரம்' நவீனமாக்கப்பட்டு, அதில் தனித் தனி அறைகளில் கச்சாப் பொருட்களும், அரவைக் கருவிகளும், சந்தைக்குப் போகத் தயாராகயிருக்கும் 'பாக்கிங்' பகுதிகளும், இதென்ன கிராமப்புறமா, இல்லை ஏதாவது நகர்ப்புற மார்க்கெட்டிங் பகுதியா? என்று வியக்க வைக்கின்றன.

சத்துமாவு 200 கிலோ தயாரித்த காலம் போய், இப்போது சுமார் நாலு டன் தயாரிக்கிறார்கள் இங்கே. ''பிராட்வே, பாரிஸ் கார்னர் போய் எல்லா ரா மெட்டீரியல்சும் வாங்கிட்டு வந்துருவேன். எங்க தயாரிப்பை பெரிய கான்டீன்ல எல்லாம் சப்ளை பண்றோம். ஸ்ரீராம் டிரஸ்ட்டோட 'கிவ் லைஃப்' இதை வாங்கி நடுத்தட்டு மாணவர்களுக்குக் கொடுக்குது!'' என்கிறார் சூபர்வைசர் ராஜகோபால்.



**வெ**ர்மி கம்போஸ்ட் ஒரு பக்கமும் தயாராகிறது. 'நிழல்' தொண்டு நிறுவன ஹார்ட்டிகல்சரிஸ்ட் ஹரீஷ் 'பஞ்சகவ்யம்' செய்யக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அதாவது இயற்கை உரம். ரசாயன உரத்தைத் தவிர்க்க விரும்புவோருக்கு இதுதான் தேவை.

''இவங்க இயற்கை உரத்தைப் பயன்படுத்தினதுல மிளகாய்க்கு நல்ல மகசூலுங்க'' என்று சந்தோஷமாகச் சொல்கிறார் விவசாயி சுப்பிரமணியம்.

**சு**காதார மையம் அரசுடையது தனியார் அன்பளிப்போடு 'பளபள' என்று மாற்றியிருக்கிறார் ராதா பார்த்தசாரதி. சுகாதார மையத்துக்கு அரக்கோணத்திலிருந்து டாக்டர் விஜயகுமாரி எல்லா திங்கட்கிழமையும் வருகிறார். இந்தக் கிராம மக்கள் தவிர ஈசலா புரம், காந்திநகர் கிராம மக்களும் இங்கேதான் சிகிச்சைக்கு வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான மருந்துகள் அத்தனையும் மாதம்தோறும் ராதாபார்த்தசாரதி வாங்கிக் கொடுத்துவிடுகிறார். (''இதற்கு யாராவது! கார்ப்ஸ்' நிதிக்கு உதவினால் வரவேற்போம்!'' என்கிறார்.



சென்னையைச் சேர்ந்த புருஷோத்தமன் என்ற இளைஞர் இங்கே மருந்துகள் எடுத்துக் கொடுக்கவும், அரசு பள்ளிக்கூடத்தில் கணினி வகுப்பும் நடத்துகிறார். இங்கு எட்டாவது வரையுள்ள அரசு பள்ளிக்கூடம் இருக்கிறது. ''மாணவ - மாணவியரை மாலை ஐந்து முதல் ஏழு வரை கூடுதல் பயிற்சி அளித்து, அந்தக் கூடுதல் ஆசிரியர்களுக்கு நாங்கள் சம்பளம் கொடுத்து விடுகிறோம்!'' என்கிறார் ராதா பார்த்தசாரதி. முன்னாள் தலைமை ஆசிரியர் கோபாலும், ஆசிரியர் வெங்கட்ரத்தினமும் கூடுதல் ஆசிரியர்களாகப் பணி புரிகிறார்கள்.

**ச**மீபத்தில் நூற்றுக்கணக்கான வீடுகளில் தனி டாய்லெட் கட்டிக் கொடுத்திருக்கிறார் ராதா பார்த்தசாரதி.

''எத்தனையோ கிராமங்கள் இருக்க இந்தத் தண்டலம் கிராமத்தை ஏன் தேர்ந்து எடுத்தீர்கள்?''





''என் கணவரின் முன்னோர் வாழ்ந்த தலம் இது!'' என்கிறார் பதிலாக.

கிராமத்துக்கு ஒரு ராதா பார்த்த சாரதி இருந்துவிட்டால், எவ்வளவு நன்றாக இருக்கும்!

- சாருகேசி

படங்கள்: யோகா